**Dated: 16.05.2025** (நேரம் : நண்பகல் 12.30 மணி)

**SC.No: 142/2021 அ.சா. 2 திருமதி. பத்ரகாளி**

(1ம் எதிரி ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் ஏற்பு)

(மனுவின்பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 மோகன்ராஜ் என் கணவர் என்றால் சரிதான். மண்டபத்தில் எந்த தெருவில் என் வீடு உள்ளது என்றால் வளைய தெருவில் வீடு உள்ளது. என் வீடு சுற்றுச்சுவருக்குள் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த சுற்றுச் சுவருக்குள் 18 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த 18 வீடுகளும் ராஜாகனியம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த ராஜாகனியம்மாள் என் கணவருக்கு அப்பத்தா என்றால் சரிதான். ராஜாகனியம்மாளுக்கு என் கணவரின் அப்பா மட்டுமே வாரிசு என்றால் சரிதான். என் கணவருடன் உடன் பிறந்தவர்கள் என் கணவரை சேர்த்து 4 ஆண்கள், 2 பெண்கள். 1ம் எதிரி என் கணவரின் சகோதரி என்றால் சரிதான். ராஜாகனியம்மாளின் சொத்துக்களில் என் கணவர் உட்பட அவருடன் பிறந்த சகோதரர்கள், சகோதரிகள் அனைவருக்கும் பங்கு உண்டு என்றால் சரியல்ல. உயில்படி என் கணவர் மற்றும் அவரது சகோதரர்களுக்கு மட்டுமே பாத்தியம். ராஜாகனியம்மாள் எந்த வருடம் உயில் எழுதி வைத்தார் என்றால் அவர் இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு. ராஜாகனியம்மாள் எழுதி வைத்த உயில் அசல் என் கணவர் வசம்தான் உள்ளது என்றால் சரிதான். அந்த உயிலில் நாங்கள் குடியிருக்கும் காம்பவுண்ட்க்குள் உள்ள 18 வீடுகளும் கட்டுப்பட்டது என்றால் சரிதான். உயிலில் கண்ட 18 வீடுகள் மற்றும் அந்த இடத்தின் மதிப்பு தெரியுமா என்றால் தெரியாது. ராஜாகனியம்மாளின் 18 வீடுகளில் தனக்கும் பங்கு உண்டு என 1ம் எதிரி கௌசல்யா பங்கு கேட்டு வந்தார் என்றால் சரிதான். 1ம் எதிரி பங்கு கேட்டு வந்த பிறகு தான் என் கணவருக்கும் அவரின்

சகோதரர்கள் மற்றும் பிள்ளைகளுக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு புகார் கொடுப்பதற்கு முன்பாக 1ம் எதிரி சொத்துகேட்டு வந்தபோது அவரை என் கணவர் அவரின் சகோதரர்கள் மற்றும் அவரின் பிள்ளைகள் தாக்கிவிட்டதாக இரண்டு புகார்கள் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. என் கணவரின் மற்றொரு சகோதரி தனபாக்கியம் என்றால் சரிதான். 1ம் எதிரியின் மகன் துரை (2ம் எதிரி) என் மீதும், என் கணவர் மற்றும் என் கணவரின் சகோதரி தனபாக்கியம் மீதும் நாங்கள் அவரை தாக்கிவிட்டதாக மண்டபம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து மண்டபம் காவல்நிலைய குற்ற எண். 275/2020 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. கவிதரன் என்பவர் என் மகன் என்றால் சரிதான். 05.01.2018ம் தேதி 1ம் எதிரியை என் கணவர் அவரின் சகோதரி மற்றும் என் மகன் தாக்கிவிட்டதாக ஒரு புகார் கொடுத்து மண்டபம் காவல்நிலையத்தில் 03/2018 என வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. 1ம் எதிரி என் கணவர் மற்றும் அவரது சகோதரர்களிடம் அடிக்கடி பங்கு கேட்டு வந்தபோது அவரை தாக்கியதால் தான் அவர் மேற்சொன்ன இரண்டு புகார்களை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கும், மண்டபம் காவல்நிலையத்திற்கும் 1 ½ கி.மீ தூரம் இருக்கும். நடந்து சென்றால் காவல்நிலையத்திற்கு 20 நிமிடத்தில் சென்றுவிடலாம். என் கணவர் புகாரை தன் கைப்பட எழுதிக்கொடுத்தாரா என்றால் ஆமாம். என் கணவர் எழுதிக்கொடுத்த புகாரில் தாத்தாவுக்கு பூர்வீக பாக்கியப்பட்ட 18 வீடுகள் எனக்கூறியுள்ளார் என்றால் தெரியாது. 30.03.2021ம் தேதி தான் என் கணவர் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு முன்புறம் தென்வடலாக ரோடு செல்கிறது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு வடக்கு புறமும், தெற்கு புறமும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த வீடுகளில் ஆட்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த 29.03.2021ம் தேதி அக்கம், பக்கம் வசிப்பவர்களுக்கு சம்பவம் பற்றி தெரியுமா

என்றால் தெரியும். என் கணவர் கொடுத்த புகாரில் சொத்து சம்மந்தமாக பேசினோம் என சொல்லியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சொத்து சம்மந்தமாக பஞ்சாயத்து என் கணவர் மற்றும் அவரது சகோதரர்களுக்கும், 1ம் எதிரிக்கும் நடந்ததா என்றால் தெரியாது. என் வீட்டிற்கு வடக்குப் பார்த்த வாசல். எதிரிகள் மூவரும் கெட்ட வார்த்தையால் என்னையும், என் கணவரையும் பேசினார்கள் என போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் பட்டா கத்தி மற்றும் அருவாள் வைத்திருந்ததை பார்த்து நான் வீட்டிற்குள் சென்று நான் கதவை பூட்டிக்கொண்டேன் என போலீசார் விசாரிக்கும் போது நான் வாக்குமூலம் கூறினேனா என்றால் கூறினேன். முதல் விசாரணையில் 2,3 எதிரிகள் அருவாள் மற்றும் வாளுடன் கொலைமிரட்டல் விடுத்தார்கள் என சொல்லியுள்ளது போல் போலீசார் விசாரிக்கும் போது நான் வாக்குமூலம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் எதிரிகள் வீட்டில் குடியிருந்தவர்களையும் கெட்ட வார்த்தைகளில் திட்டினார்கள் என சொல்லியுள்ளது போல் போலீசார் விசாரிக்கும் போது நான் வாக்குமூலம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி கௌசல்யா என் கணவரை வெட்டினால் தான் சொத்து கிடைக்கும் என முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் எதிரிகள் என் கணவரை வெட்டுடா என சொல்லும்போது நான் வீட்டிற்குள் சென்றுவிட்டேன் என சொல்லியுள்ளது போல் போலீசார் விசாரிக்கும் போது நான் வாக்குமூலம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி என்னைப் பார்த்து வெட்டிவிடுவேன் என மிரட்டினார் என முதல்விசாரணையில் கூறியுள்ளது போல் புகாரிலும், போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்திலும்

சொல்லவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் சொன்னது போல் எதிரிகள் எங்கள் வீட்டிற்கு ஆயுதங்களுடன் வரவில்லை என்றும், 3ம் எதிரி கையில் வாள் வைத்திருக்கவில்லை என்றும், 2ம் எதிரி கையில் அருவாள் வைத்திருக்கவில்லை என்றும், சண்டை எதுவும் நான் சொன்னது போல் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் கணவர், என் கணவரின் சகோதரர்கள் மற்றும் சகோதரி ஆகியோர்கள் மீது 1ம் எதிரி புகார் கொடுத்து வழக்குப்பதிவு செய்துள்ளதாலும், எதிரிகள் மீது புகார் கொடுத்தால் அவர்கள் சொத்தில் பங்கு கேட்டு வரமாட்டார்கள் எனவும், என் கணவர் பொய்யாக வழக்கு பதிவு கொடுத்துள்ளார் என்றாலும், அந்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.